Registered as a News Paper in Ceylon P. M. G. No. H. A. 9/300 of 1953.

விரோதி௵ (1889) ஆவணி௴ 28உ ஆரம்பமானது.

இந்து சாதனம்

வெள்ளிதோறும் வெளிவருவது

தனிப்பிரதி விலை: சதம் 10.

[புத்-௭௫] யாழ்ப்பாணம்:- சோபகிருது௵ ஆவணி௴ ௧௪௳ வெள்ளிக்கிழமை (30 August. 1963) [இல-௨௨

சதாசிவம் காட்டிய சரியான வழி

"இன்றுவரை ஈழத்திலுள்ள தமிழ்எழுத்தாளர்கள் அத்தனைபேரும் அங்கம் வகிக்கும் முறையில் அகில இலங்கைத் தமிழ் எழுத்தாளர் சங்கம் ஒன்று உருவாகாமல் இருந்துவந்தமை வருத்தத்திற்குரியது. ஈழத்தில் திசைதோறும் சிதறுண்டுகிடக்கும் எழுத்தாளர்கள் ஒருவரையொருவர் புரிந்துகொள்வதற்கும், கருத்துக்களைப் பரிமாறிக்கொள்வதற்கும் எழுத்தாள சமுதாயத்தின் பெருமைகளையும், உரிமைகளையும் பாதுகாத்துக்கொள்வதற்கும் இவர்கள் அனைவரும் ஒன்றுபடுதல் இன்றியமையாததாகின்றது. இந்தத்தேவையை நிறைவேற்றுவதற்குரிய வழிவகைகளைக் கூறும்படி இவ்விழாவில் எனக்குப் பணித்துள்ளதன் காரணமாக யான் உணர்ந்த ஒரு வழியைக் கூறுகிறேன்.

இலங்கையில் இத்தகைய பணியைப் புரிவதற்காக உழைக்க வேண்டியவர்கள் யாழ் தமிழ் எழுத்தாளர் சங்கத்தினரே இவர்கள் இடரும் தொல்லையும் மிக்க பணி இது என்ற காரணத்தால் இதனைச் செய்வதற்குப் பின்நிற்கக் கூடாது".

மட்டக்களப்புத் தமிழ் விழாவில் நடைபெற்ற அகில இலங்கைத்தமிழ்எழுததாளர் சங்கத் துவக்கி வைத்தல் நிகழ்ச்சியின்போது கலாநிதி ஆ. சதாசிவம் அவர்கள் மேற்கண்டவாறு கூறினர்

தொடர்ந்து அவர் குறிப்பிட்டார்:

"பலர் நலம் அடைவதென்றால் சிலர் தம சொந்த நலன கருதாது இடர்களையும் இன்னல்களையும் அனுபவித்தேயாக வேண்டும். எனவே யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் தமிழ் எழுத்தாளர் சங்கத்தினர் பொறுப்பின் பளுவிற்கு அஞ்சாமல் தமது சங்கத்தை ஓர் அகில இலங்கைத் தமிழ் எழுத்தாளர் சங்கமாக விரிவுபடுத்திக் கொண்டு அதன் கிளைகளைக் கிழக்கிலங்கை, மலைநாடு, வன்னிநாடு முதலிய பகுதிகள் தோறும் நிறுவிப் பணிபுரிய முன்வர வேண்டும். அப்படியுருவாக்கி விரிவாக்கும் மன்றம் கடுமையான சட்டதிட்டங்களைக் கொண்டிருத்தல் கூடாது.

சுதந்திரம் மனிதனது குறிப்பாக எழுத்தாளனது பிறப்புரிமை. எனவே இச் சங்கமானது எழுத்தாளன் இன்னதைத்தான் எழுத வேண்டும் என்று பலவந்தப்படுத்தவோ இன்னதை எழுதக்கூடாது என்று கட்டுப்படுத்தவோ கூடாது. இந்த அமைப்பில் ஒரு சங்கம் உருவாகுவது தமிழ்வளர்ச்சிக்கு மிகவும் உகந்ததாகும்"

திரு. கனகசெந்திநாதன், கவிஞர் சோ. நடராசன், எம். ஏ ரகுமான் ஆகியோரும், திரு. சதாசிவம் அவர்களின் மேற்படி ஆலோசனையை முழுமையாகஏற்றுக்கொண்டு உரை நிகழ்த்தினர்.

தொடர்ந்து நாட்டிலுள்ள பல சங்கங்களின் பிரதிநிதிகள் தமது சங்கங்களை இப்படி உருவாக்கப்படும் அ. இ. எழுத்தாளர் சங்கத்தின் கிளைகளாக மாற்றிக்கொள்வதற்கு மகிழ்ச்சியோடு முன்வந்து உடன்பாடுதந்தனர்.

நற் சிந்தனை

ஒன்றென் றிருதெய்வம்
உண்டென் றிருவென்று
அன்றுசொன்ன பட்டினத்தா
ரடிபணிவ தெக்காலம்.

அம்பலவாண நாவலர் நினைவுவிழா

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரித் தாபகர் ஸ்ரீ அம்பலவாண நாவலர் நினைவு விழாவும், "சற்குருமணிமாலை" அரங்கேற்றமும் எதிர்வரும் (7-9-63) சனிக்கிழமை பிற்பகல் 4-30 மணி முதல் யாழ் - சைவ பரிபாலன சபைத் தலைவர் திரு. த. முத்துச்சாமிப்பிள்ளையவர்களின் தலைமையில் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

பிறபகல்4-30—6-00மணிக்கு இணுவில் கந்தசாமி கோஷ்டியினரின் நாதஸ்வரமும் அடுத்து அம்பலவாண நாவலர் நினைவு மலர் வெளியீடும், உதவி வித்தியாதிபதி திரு. சி. உ. சோமசேகரம் எம். ஏ. அவர்களால் "சற்குருமணிமாலை" அரங்கேற்றமும் திருவாளர்கள் மு. க. சுப்பிரமணியம், பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை திரு. வே நாகலிங்கம் ஜே. பி., பண்டிதர் சோ. இளமுருகனார், முதலியார் செ. சின்னத்தம்பி ஆகியோரின் சொற்பொழிவுகளும் நிகழும்.

தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர் மறைவு

கடந்த சில ஆண்டுகளுக்குள் தமிழரசுக் கட்சியிலிருந்து 4 பாராளுமன்ற உறுப்பினர்கள் மறைந்து விட்டனர். நாலாவதாக மறைந்துள்ள திருமலை உறுப்பினர் இ. ந. இராசவரோதயம் அவர்களின் மறைவு தமிழினத்திற்கு ஏற்பட்ட பேரிழப்பாகும். திருகோணமலையில் தமிழ் நிலங்களைப் பறித்தெடுக்கும் பழிகாரச் செயல்களை எதிர்த்துப் பாடுபட்டு வந்த இச் சான்றோர் இலங்கையில் சைவ சமயப் பணிகளுக்கெல்லாம் தாமாக முன்வந்து உதவி புரிந்தார். இச்சைவத் திருமகனார், அண்மையில் சைவ பரிபாலன சபை தொடங்கவிருக்கும் கந்தபுராணவுரை வெளியீட்டிற்கும் தன்னாலானமட்டும் தமிழ்ப்பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையிலும், தமிழ்ச் சைவன் என்ற வகையிலும் உதவி செய்வதாக வாக்களித்திருந்தார் அவரை இழந்து கலங்கி நிற்கும் திருமலைப் பகுதி மக்களுக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கும் எமது அனுதாபத்தை அறியத் தருகிறோம்

எழுத்தாளர் கடமை

மட்டக்களப்புத் தமிழ் விழாவின் இரண்டாம் நாள் நிகழ்ச்சிகளை குற்றுவிளக்கேற்றி ஆரம்பித்து வைத்த திரு. அருணாசலதேசிகர் அவர்கள் தமது ஆரம்ப உரையின போது, எழுத்தாளர்கள் மனித இனத்தின் பெருமைக்கும், இன்பத்திற்கும் வழி வகுக்கும் இலக்கியங்களைப் படைக்கவேண்டும். எண்ணத்திறன் மனிதனுக்கே உரிய தனிச்சிறப்பு அச்சிறப்பியல்பைத் துணைக்கொண்டு அவ்வியல்பும் அதன் அடியாக, உலகம் சிறக்கும் வகையில பிறக்கும் சீரிய எண்ணங்களும் பல்கி வளர வழி வகுக்க வேண்டும என்று குறிப்பிட்டார். தொடர்ந்து அகில இலங்கைத் தமிழ் எழுததாளர் மறை அங்குரார்ப்பணம் நடைபெற்றது

பிற்பகல் நிகழ்ச்சிகளுக்கு ஆரம்பமாகத் தொடங்கி நடைபெற்ற மாதர் அரங்கில பண்டிதை சத்தியதேவி துரைசிங்கம், பண்டிதை, சைவப்புலவர் தங்கம்மா அப்பாக்குட்டி, செல்வி புஷ்பா

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

உ

பற்றிநின்ற பாவங்கள் பாற்ற வேண்டில்
பரகதிக்குச் செல்வதொரு பரிசு வேண்டில்
சுற்றிநின்ற சூழ்வினைகள் வீழ்க வேண்டில்
சொல்லுகேன் கேள்நெஞ்சே துஞ்ச வண்ணம்
உற்றவரும் உறுதுணையும் நீயேயென்
உன்னையல்லால் ஒருதெய்வம் உள்னென்றும்
புற்றரவக் கச்சார்த்த புனிதா வென்றும்
பொழிலாரூ ராவென்றே போற்று நில்லே

x x x

ஊனாகியூனுளுயிராயுயிர்தோறுமாகி
வானாதியானபொருளாய்மதியாகிவெய்யோன்
றானாகியாண்பெண்ணுருவாகிச்சராசரங்க
ளானான்சிவன்மற்றவனீள்கழற்கன்புசெய்வாம்.

திருவதிகை - மனவாசகங்கடந்தார்
அருளிச்செய்த

உண்மை விளக்கம்

மூலமும் உரையும்

[சித்தாந்த பண்டிதர், சைவப்புலவர் இ. செல்லத்துரை]

(முற்றொடர் - 24)

சூரியன் உதிக்குமுன் இருந்த இருள் அது உதித்தவுடன் விட்டு நீங்கி வேறெங்கும் செல்வதில்லை. மேலும், சூரியன் இல்லாதபோது காணப்படும் அவ்விருள் வேறெங்கிருந்தும் அங்குவந்து சேர்ந்ததில்லை. எனவே, அவ்விருள் அவ்விடத்திலேயே ஒளியினுள் சத்திகெட்டு அடங்கியும், ஒளியில்லாத காலத்தில் தோன்றியும் அழிவற்று நின்றது. இவ்விருளேபோல ஆணவமும் பெத்தநிலையில் மேலிட்டுத் தோன்றியும் முத்தி நிலையில் (இருந்தும் இல்லையெனும்படி) தன் சத்தி கெட்டு அடங்கியும் அழிவின்றி உளதாம் என்க.

"ஒன்று மேலிடில் ஒன்று ஒளிக்கும்" (கொடிக்கவி) எனவும,

சேணார் இருள்வடிவு செங்கதிரோன் பால்நிற்கக்
காணா தொழியுங் கணக்கேபோல் — ஆணவத்தின்
ஆதி குறையாமல் என்பால் அணுகாமல்
நீதி நிறுத்தும் நிலைபோற்றி.......'

(போற்றிப் பஃறொடை) எனவும் வருவன இங்குக்காட்டிய உண்மைக்குச் சான்றாம்.

மேலும், 'முத்திதனில்' என்றதற்கு 'முத்தியடைந்த காலத்தில்' என்றே பொருள் கொள்ளப்படுதலின், முத்தான்மாவில் வலிகெட்டு நின்ற ஆணவத்தை ஆண்டில்லையென்றே கொள்ளினும் அதே காலத்தில் தனது பலவேறு சத்திகளால் பெத்தான்மாக்களிடத்தில் தன்னியல்பு குறையாமல் அழிவின்றி உளதாய் நிற்கும் ஆதலின் அவ்வாணவம் நித்தியமென்பது துணியப்படும்.

இனி, இங்ஙனம் நின்ற ஆணவமே போல கன்மம் மாயை என்பனவும் ஆன்மா முத்தியடைந்த அக்காலத்தில் ஏனைப் பெத்தரிடத்தும் காணப்படுதலால் பாசம் மூன்றும் நித்தம் என்க

பாசங்கள் மூன்றும் ஆன்மாவை அகன்று நித்தமாய் நின்றன என்று கண்டோம் அங்ஙனம் அகன்று நின்ற அவை ('இத்தை விளைவித்தல்'-) பேரின்பத்தை ஆன்மாவிடத்தில் உளதாக்கி அநுபவிப்பித்தல் எங்ஙனம் என்பது இங்கு ஆராயத்தக்கது பிறர் நமக்குத் துன்பஞ் செய்யாமையால் நாம் சற்றே சுகித்திருக்க முடிகிறது அவரது துன்பஞ் செய்யாமையாகிய உதவி நமது சுகவாழ்வுக்குக் காரணமாதல் ஒருதலை. ஆகவே அவர் நம்மை வாழ்விப்பவர் ஆவர். இவரே போலப், பாசங்களும் ஆன்மாவை அகன்று நிற்றலாலும் அங்ஙனம் நிற்றலினால் மயக்கஞ் செய்யாமையாகிய உதவிபுரிவதினாலும் ஆன்மாவினிடத்துப் பேரின்பத்தை விளைவிக்கின்றனவென்க. இந்நுணுக்கத்தை உள்ளிடு பொருளாயடக்கி "மலம் தானே செய்யவில்லை; செய்விக்கின்றது என்னும் பொருள்பட" (விளைத்தல் மலம் என்னாமல்) "விளைவித்தல் மலம்" எனப் பிறவினை வாய்பாட்டான் உரைதத நயம் போற்றுதற்குரியது.

இங்குக் காட்டியவற்றால் மும்மலங்களும் முத்தான்மாவை விட்டு நீங்குமென்பதும், அங்ஙனம் நீங்குமாயினும் அவை அழிவின்றி உளவாம் என்பதும் விளக்கப்பட்டன. எனவே, முத்திதனில் மூன்று முதலும்" என்றதற்கு "ஆன்மா முத்தியடைந்த காலத்தில் பதி பசு பாசங்கள் அழிவின்றி உள" என்றும், அவற்றுள் பாசம் ஆகிய மும்மலமும் ஆன்மாவைவிட்டு நீங்கிய நிலையிலேயே உள என்

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

THE HINDU ORGAN

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம்
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லா மரனாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

இந்துசாதனம்

சோபகிருது ௵ ஆவணி ௴
கசஉ வெள்ளிக்கிழமை

அளவு கடந்த அட்டூழியம்!
வியற்ற[illegible]பரீதம் !!

தெ[illegible] கிழக்காசியாவில் 'விய[illegible]ம' என்ற நாட்டில் மத[illegible]டிப்படையிலே ஆட்சி[illegible] கிளர்ச்சியும் நடைபெறுவதையும அவ்வித மாற்றத்தால் மக்கள் சொல்லொணாத துன்பத்தில் ஆழ்த்தப்பட்டிருப்பதையும நோக்கும் பொழுது மனிதப் பண்பு அற்றுப்போகுங்காலம் அணுகிவிட்டதென்றே கூறவேண்டியிருக்கின்றது. முறைப்படி ஆட்சிபீடத்தில் அமர்ந்திருப்பவரை வாயடக்கிவிட்டு அவரின் சகோதரனும் மனைவியும் ஆதிக்கத்தைச் செலுத்திப் புத்த-கிறீத்தவப் போராட்டத்தைத் தூண்டிவிட்டிருக்கின்றார்கள் என்று செய்திகளிலிருந்து நாம் காண்கின்றோம். புத்த குருமார்கள் இந்த ஆட்சி விபரீதத்தை எதிர்த்துத் தாமாகவே உயிர்த் தியாகஞ் செய்யும் அளவுக்கு இந்தப் புரட்சி பரவியிருககின்றது.

மனித உரிமைகளின் மாண்பையும் அம்மாணபை நிலை நாட்ட அவ்வுரிமைகளைக் காப்பாற்றுங் கடமையையும அடிக்கடி எடுத்து உலகமாநாடுகளில் உரைத்த வண்ணமாயிருக்கின்ற வல்லரசுகளும் ஏனைய நாடுகளும் இந்தப் பழிச்செயல் வியற்நாமில் நீடிப்பதைத் தடுக்க முடியாதவர்களாய் இருப்பது விபரீததிலும் விபரீதமாகும். மதம்,மொழி இனம் என்ற வகையில் மனிதன் சுதந்திரமாக வாழ்வதற்கு ஒரு நாடு இடங் கொடுககவில்லை யெனறால் அந்நாடு நாடாகாது. விலங்குகள் வாழும் காடாகவே கருதப்பெறவேண்டும். இந்தக் கொளகையை அடிப்படையில் அமைத்திருககும் உலக மாநாடு அக் கொள்கையை மீறி அட்டூழியஞ் செய்கின்றவர்களுக்கு உரிய பாடம் கற்பிப்பதன்றோ முறை?

வாழையடி வாழையாக வரும் மதமும் தாய்மொழியும ஒவ்வொருவருக்கும் பிறப்புரிமையாக வுளளன. அரச அதிகாரத்தால் அல்லது வேறு வல்லமையால் அன்றிச் சூழ்ச்சியினால் இந்தப் பிறபபுரிமையை எவன் ஒருவனையும் இழக்கச் செய்வது பழியாகும, மன்னிகக முடியாத பாதகமுமாகும். சைவர்கள சைவர்களாகவும், புத்தர்கள் புத்தர்களாகவும், இஸ்லாமியர் இஸ்லாமியராகவும் கிறீத்தவர்கள் கிறீத்தவர்களாகவும் வாழ முடியாதென்றால் வாழ்ந்தென்ன பயன். அவ்வாறே பிறப்புரிமையாவும தமிழ்பேசுவோர், தமிழையும் சிங்களம பேசுவோர் சிங்களத்தையும், இவ்வாறே எவரெவர் எநத எந்த மொழி பேசுகின்றனரோ அவரவர் அந்த அந்த மொழியுரிமையையும் அநுபவிகக முடியாத வகையில் வாழ்ந்தென்ன பயன். எனவே வியற்நாம் விபரீதத்தை விசாரிக்க முன்வரும அரசியற்றலைவர்கள் அடிப்படையான மதம மொழி உரிமைகளைக் காப்பாறற வழிவகை தேடி உலகம எங்கும உள்ள இந்த விபரீதங்களைப் போக்கி யாவரும் தங்கள் பிறப்புரிமைகளைத தடையின்றிக் காப்பாற்ற ஒழுங்கு செய்தலே உத்தமமான நெறியாகும்.

வியற்னாம் குழப்பத்தைப் பற்றிப் பேசும உரிமை யாருக்குரியது? எவ்வகையிலும மதம் மொழி என்ற வேறுபாடுகாட்டாது அரசு நடத்துகின்றவர்களுக்கே அத்தகைய அரசியற்றலைவர்கள் யார் எனபதுதான் கேள்வி.

—:—

மந்திரம் மூர்த்தி முதலியவற்றின் தத்துவ விளக்கம்

மந்திர வடிவம்

உலகத்திற்கு முதற்காரணங்கள் சுத்தமாயை, அசுத்தமாயை, பிரகிருதி மாயை என மூன்றாகும். இவற்றுள் மேலாகிய விந்துவில் சிவசக்தி சேரப்பட்டு நிற்றலானும், அச் சுத்தமாயையிலே தோன்றிய காரணத்தினாலும் சிவசத்தியினால் அதிட்டிக்கப்பட்டுச் சிவபூசை அக்கினிகாரியம் செபம் . முதலியவற்றால் வழிபட்ட ஆன்மாக்களுக்குப் போக மோக்ஷங்களாகிய பயனைக் கொடுத்தலாலும் முதல்வனுக்கு மந்திரங்கள்வடிவமென்று விசேஷ உரிமையுடையனவாக ஆகமங்கள் கூறும்.

இறைவனுக்கு மந்திர வடிவங்களுள்ளும் பஞ்சப் பிரம மந்திர வடிவம் சிறந்ததாம். மந்திரங்களெலலாவற்றுக்கும் முற்பட்டுத் தோற்றியதனாலும் மற்றைய மந்திரங்களுக்கு மூலமாதலாலும் அவைகளுள்ளும் பஞ்சப் பிரம மந்திரத்தை திருமேனியாக விதந்தெடுத்துக் கூறப்பட்டது.

ஸ்ரீ வை. விருத்தகிரீசசர்மா,
குருக்கள் வளவு, அச்சுவேலி

ஈசானம்

எல்லா வுலகங்களையும் அனுக்கிரகஞ் செய்யும் ஐசுவரிய குணத்தோடு கூடியதனாலும், எல்லா மார்க்கத்திற்கும மேலான இடத்திலிருப்பதாலும் ஈசான மூர்த்தா எனப்படும்.

தற்புருஷம்

ஆன்மாக்களுடைய சரீரங்களை யதிட்டித்து நின்று, ஞானத்தைப் பிரகாசிக்கச் செய்து மலத்தை நீக்குதலால் தத்புருஷவத்திரமெனப்படும்.

அகோரம்

ஞானமாகிய சிவரூபமானது கோரமாகிய மலத்திற்கு விரோதியாயிருந்து அதைச் சாந்தப்படுத்துவதால் அகோர இருதயமெனப்படும.

வாமதேவம்

ஆன்மாக்களது கன்மத்துக்கேற்பத் தனு கரண புவன போகங்களைக் கொடுத்துத் தருமமுதலியவற்றை யனுபவிக்கச் செய்யுங் கிருபையானது வாமதேவகுஹ்யமெனப் படும்.

சத்தியோசாதம்

இச்சாசத்தியினாலே சகலருக்கும் பிரளயாகலருக்கும் உடம்பை யுண்டாக்குகின்றமையாலும், விஞ்ஞானகலருக்கு வைந்தவ சரீரததை யுண்டாக்குகின்றபடி யாலும் தொழிலின் வேகத்தாற் சத்தியோ ஜாதமென்று சொல்லப்படும்,

சிவஞானசித்தியார்

மந்திரமதனிற் பஞ்சமந்திரம்
  வடிவமாகத்
தந்திரஞ்சொன்ன வாறிங் •
  கென்னெனச் சாற்றக்கேணீ
முந்திய தோற்றத்தாலு
  மந்திரமூலத்தாலு
மந்தமில் சத்தியாதிக்
  கிசைத்தலு மாகுமன்றே.

“சிவனுக்கு மந்த்ர தனுவு மாயாதனுவுமில்லாமல் சித்ஸ்வரூபமே யாயிருக்கவும், சாதகருடைய தாயா பூஜைகணமித்தமாகச் சொலலப்பட்ட பஞ்ச மந்திரதநு உபசாரமலலது ஸ்வபாவமல்ல. பஞ்ச மந்திரமாவது அநுக்ரஹ திரோதான சம்ஹார ஸ்தித ஸ்ருஷ்டார்த்தமகா ஈசான தத்புருஷ அகோர வாமதேவ சத்தியோசாதங்கள் மூர்த்தா வக்த்ர ஹிருதய குஹ்ய மூர்த்திகளாகச் சொல்லப்பட்டது சித் ஸ்வரூபம் — ஞானஸ்வரூபம்.”

—தொடரும்.

வேதாகம விஸ்வ வித்தியா பீடம்

ஸ்ரீ முன்னேஸ்வர தேவஸ்தானததில 25-8-63 ஞாயிறு பகல் 2மணிக்கு திருகோணமலை சிவஸ்ரீ இ. பூர்ணாநந்தேஸ்வரக்குருக்கள அவர்கள் தலைமையில் அவை கூடியது. பிரமஸ்ரீ சி. பாலசுப்ரமண்யக் குருக்களைத் தலைவராகவும், பிரமஸ்ரீ Dr. கா கைலாசநாதக் குருக்களைக் காரியதரிசியாகவும், பிரமஸ்ரீ கி. பாலசுப்பிரமண்யக்குருக்களைத் தனாதிகாரியாகவும் இன்னும் பலரைச் செயற் குழுவினராகவும் அவை தெரிவு செய்தது. காலை ருத்ரம் சமக பாடம், பகல் தமிழ் இலக்கண இலக்கியம், ஸம்ஸ்கிருத இலக்கண இலக்கியம் இவை பள்ளிக்கூட நேரமாகவும் மாலை புராணபாராயணதிபாடம்,வேதம் தமிழ்மறைப்பாடம் இம் மாதிரி கல்வி புகட்டத் திட்டங்களும், பாடசாலை நடத்த வீட்டுக்கு அரை ரூபாவீதம்போட்டு வசூலிக்கவும், கிராமத்துக்கு ஒரு மாணவன் வீதம் அனுப்பவும், சபையாரால் நிர்ணயித்த செலவைப் பெற்றோரே எற்று மாணவனையனுப்பவும் ஐந்து வருசங்களுக்கு கிரியா விளக்கங்களோடு சிவாச்சார்ய தராதர பத்திரம் கொடுக்கவும் ஆங்கில [illegible] 29 [illegible] வும் தீர்மானங்கள் நிறைவேறிற்று.

உ

ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலர் உருவச்சிலை நிதி

நாவலர் பெருமான் நமது ஈழநாட்டில் சென்ற நூற்றாண்டில் உற்பவித்த ஓர் அவதார புருடர். தமிழ்மொழி வளர்ச்சிக்கும், சைவசமய அபிவிருத்திக்கும் அவர்புரிந்த தொண்டுகளின் பெருமை அளவிடற்கரியது

அன்னாரின் ஞாபகமாக ஓர் உருவச்சிலையை யாழ்ப்பாண நகரில் நிறுவுதற்கு எங்கள் சபை தீர்மானஞ் செய்துள்ளது சபையின் விருப்பத்தை நிறைவேற்றும் நோக்கமாக, யாழ்ப்பாண மாநகரசபை குறித்த சிலையை பொதுசன நூல்நிலைய முன்றிலில் நிறுவுவதற்கு இடம் தருவதாக வாக்களித்திருக்கிறது.

குறித்த சிலையை, சிறந்த முறையில் செய்வித்து ஒரு பீடத்தில் அமைக்க வேண்டியிருப்பதால் அதற்குரிய செலவுக்காக ஒவ்வொரு தமிழ் மகனையும் தன்னாலியன்ற பொருளுதவியைப் புரியும்வண்ணம் கேட்டுக்கொள்ளுகின்றோம.

இந்நிதிக்கு உதவப்படும் தொகைகள், உதவியவர்களுடைய பெயர்களுடன் காலந்தோறும் இந்துசாதன தமிழ் - ஆங்கில பிரசுரங்களில் வெளியிடப்படும.

த. முத்துச்சாமிப்பிள்ளை, ஆ. தனபாலசிங்கம், இ. பொ. இராசையா
தலைவர். செயலாளர். பொருளாளர்.

உ

சமய பாடத் தேர்தல்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாரால் ஆண்டுதோறும் நடத்தப்படும் சமயபாடப் பரீட்சை வருகிற மார்கழி (December) மாத நடுப்பகுதியில் நடத்தப்படும்.

தேவாரம், உபந்நியாசம், புராணபடனம் ஆகிய மூன்றும் தேர்தலுக்குரிய பாடங்களாகும். தேர்தல் மேற்பிரிவு, மத்திய பிரிவு. கீழ்ப்பிரிவு, ஆரம்பபிரிவு என்ற பாகுபாடுகளையுடையது. ஒவ்வொரு பிரிவுக்கும் மூன்று பரிசில்கள் ஷை சபையாதரவில் மார்கழி மாதத்தில் நடைபெறும் அகில இலங்கை சைவ மகாநாட்டில் சித்திபெறும் பிள்ளைகளுக்கு வழங்கப்படும். பெண் பிள்ளைகளுக்கும், ஆண் பிள்ளைகளுக்கு . வெவ்வேறு பரீட்சைகள் வைத்துப் பரிசில்கள் வழங்கப்படும்,

பிரவேசப்பணம்:— ஆரம்ப பிரிவு — 50
கீழ்ப்பிரிவு — 75
மத்திய பிரிவு —1-00
மேற்பிரிவு —1-25

தேர்தல்களிற் பங்குபற்ற விரும்பும் பிள்ளைகள் தங்கள் பெயரையும் வயதையும் குறித்துத் தலைமையாசிரியருடைய கைச்சாத்துடன் நுழைவுப்பத்திரங்களை 30-9-63 - க்கு முன் கீழ்க்காணும் விலாசத்துக்கு அனுப்புவார்களாக,

சைவபரிபாலன சபை,
யாழ்ப்பாணம். 16-8-63

மு. மயில்வாகனம்,
சமயப்பிரசார அமைச்சர்

பாட அட்டவணை

1. தேவாரம்

ஆரம்பப்பிரிவு, 10 வயதுக்குட்பட்டவர்கள்

1. மாதர்ப்பிறைக்கண்ணி. பண்: காந்தாரம், ராகம்: நவரோஸ் தாளம்: ரூபகம்.
2. அல்லல் என்செயும். பண்: திருக்குறுந்தொகை, ராகம்: நாதநாமக்கிரியை, தாளம்: ஆதி.
3. அண்ணலே யெனை, (பெரிய புராணம்): ராகம்: தோடி.

2, கீழ்ப்பிரிவு, 13 வயதுக்குட்பட்டவர்கள்

1. அங்கமும் வேதமும். பண்: நட்டபாடை, ராகம்: நாட்டை, தாளம்: ரூபகம்.
2. பத்தராய்ப் பணிவார்கள். பண்: கொல்லிக்கௌவாணம், ராகம்: நவரோஸ், தாளம்: ஜெம்பை:
3, நாண தனக்கன்பின்மை, (திருவாசகம்), ராகம்: மோகனம்.
4. கற்பனை கடந்தசோதி, (புராணம்). ராகம்: கேதாரகௌளை.
5. காதின் மணியோலை, (திருப்புகழ்). ராகம்: மோகனம், தாளம்: ஆதி.

(தொடர்ச்சி 4ம் பக்கம்)

உண்மை விளக்கம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

றும் பொருள்கொண்டு, ‘இத்தை விளைவித்தல் மலம்” என்றதை ‘அம்மும்மலமும் நீங்கி நிற்றலினால் ஆன்மாவுக்குப் பேரின்பத்தை விளைவித்து நிற்கும” எனக் கருதியமைக.

பொழிப்பு;— ஆன்மா முத்தியடையுங் காலத்திலே, பதி முதலிய மூன்று பொருள்களும் அழிவின்றி நிற்குந் தன்மையைச் சொல்லுங்கால், ஆன்மா பேரின்பததை அநுபவித்தலினாலும், பதி ஆன்மாவுக்கு அவ்வின்பத்தைக் கொடுத்துவ தலினாலும், மலம் ஆன்மாவினிடத்து அவ்வின்பத்தை விளைவித்து வருதலினாலும் அவை மூன்றும் நித்தமாம். (என்பது தெளியப்படும்.) இவ்வுண்மையை நீ கண்டுணர்வாயாக.

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

உண்மை விளக்கம்

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

முத்திக்கு வழி
குருலிங்க சங்கம வழிபாடு

அப்பாவிம் முத்திக் கழியாத காரணந்தான்
செப்பா யருளாலே செப்பக்கே — ளொப்பில்
குருலிங்க வேடமெனக் கூறிலிவை கொண்டார்
கருவொன்றி நில்லார்கள் காண். 51

சொ—கூ: "அப்பா, இம்முத்திக்கு அழியாத காரணம் (தான்) அருளால் (+ஏ) செப்பாய்" என மாணவகன் வேண்டினுக, ஞானசாரியர்:) 'செப்பக்கேள், (அக்காரணந்தான்) ஒப்பு இல் குருலிங்கம் வேடம் என (ஆகமங்கள்) கூறில், இவை கொண்டார், கரு ஒன்றி நில்லார்கள்; (என்ற உண்மையை நீ) காண் (என்றார்)

ப—ரை: அப்பா — ஞானசாரிய முதல்வரே, இம் முத்திக்கு அழியாத காரணம அருளால் செப்பாய் — இப் பரமுத்தியை அடைந்து வாழ்தற்கு நிலையான வாயிலை (-வழியினை)க் கருணை கொண்டு சொல்லியருளுவீராக; (என்று மாணவகன் வேண்டினுக, ஞானசாரியர்;) செப்பக்கேள் — அதனைச் சொல்லுகிறோம் கேட்பாயாக, ஒப்பு இல குருலிங்கம் வேடம் என கூறில் — (அவ்வாயில்) நிகரில்லாத ஞானசாரியர் சிவலிங்கம் மெய்யடியார் என்னும் மூவிடதது வழிபாடியற்றலேயாம் எனச் சிவாகமங்கள் கூறுமாயின், இவை கொண்டார் — இந்த மூவிடதது வழிபாடியற்றலை விரதமாகக் கொண்டவர்கள்; கரு ஒன்று நில்லார்கள் — கருப்பத்திலே பொருந்திப் பிறந்து இறந்து உழலமாட்டார்கள் என்ற உண்மையை நீ உணர்வாயாக (என்றார்).

'தான்' 'ஏ' என்பன அசைகள். வேடம், சங்கமம், மெய்யடியார்கள் என்பன ஒருபொருள் குறித்த சொற்கள்

மெய்ஞ்ஞானத்தாற் சீவன்முத்திநிலையடைந்தவர்களுக்கும் மாயாகாரியமான உடம்பு இறக்கும் வரைக்கும் பிராரத்த வினை அவ்வுடம்பை ஒட்டி நிற்கும். அதனை அநுபவிக்குங்கால் விருப்பு வெறுப்பு உளவாம். அவை உளவாகவே அவற்றால் மாயா தத்துவக் காட்சியும் ஏகதேச உணர்வாகிய பாசஞான பசுஞானங்களும் மறித்தும் உளவாகிப் பிறவித்துன்பத்துக்கு ஏதுவாம. ஆகவே, இங்ஙனம் கீழ் நிலைப்படுத்தும் அம்மலங்களைப் பற்றற நீக்குதற்கு வழி கூறுவார் "ஒப்பு இல் குரு லிங்கம் வேடம் எனக் கூறில் இவை கொண்டார் கரு ஒன்றி நில்லார்கள்" என்றாரென்க.

பொழிப்பு: மாணவகன்: பரமுத்தி நிலைத்தற்குரிய வாயில் யாதென வேண்ட, ஞானசாரியர்: சிவாகமங்கள் உரைக்கும் குரு லிங்க சங்கம வழிபாடியற்றலே வாயில் என்வும அதுகொண்டார் பிறவியின்றிப் பரமுத்தியில் நிலைத்திருப்பரெனவும் கூறினர்.

—தொடரும்

கீரிமலையின் புனிதத் தன்மை காப்பாற்றப்படவேண்டும்

[யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபைக் காரியதரிசிக்கு திரு மு. குமாரசாமி பெரியகடை, யாழ்ப்பாணம எழுதிய கடிதம்.]

ஐயா,

சைவமக்களுடைய புனித தலங்களுள் கீரிமலை ஒன்றாகும். அங்கு நகுலேஸ்வரன் கோயில் காசி விசுவநாதர் கோயில் மடங்கள் முதலிய தாபனங்கள் உள்ளன. புண்ணிய தீர்த்தக் குளமும் இருக்கின்றது, இப்பொழுது சைவ மக்களுடைய கவனக் குறைவினுல மேற்படி தலத்தின் புனிதத தன்மை குறைந்து வருகின்றது.

யாத்திரை நோக்கமாகச் செல்பவர்களைவிட உல்லாசக் கொண்டாட்டத்துக்குச் செல்பவர்கள் தொகை கூடியிருக்கின்றது. அந்நிய மதத்தவர்களே இவர்களுள் பெரும்பாலானோர். அவர்கள் திருக்குளத்தை அசுத்தப்படுத்துவதுடன் மாமிசம் மதுபானம் அங்கு அருந்தவும் ஏற்பாடு செய்துகொண்டு செல்கின்றார்கள்.

உங்கள் சபையை இக்குறைகளை நீக்கி கீரிமலைத் தலத்தின் புனிதத் தன்மையைப் பேணக்கூடியவழிவகைகளைக் காணும்படி விநயத்துடன் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

குறித்த திருக்குளத்தையும் அதன சூழலையும சைவமக்களுடைய புனிதத் தலமாக்குவதே இதன் தெய்வத் தன்மையைக் காப்பாற்றுவதற்குச் சிறந்த வழியாகும்.

ஆவணி மூல உற்சவம்

[யாழ்ப்பாணம் திருவண்ணை நகர் ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி கோவிலில நேற்று வியாழக்கிழமை பகல 10-30 மணியளவில் ஸ்நபனாபிஷேகமும் இரவு 7 மணி முதல் சுவாமி "பிட்டுக்குமணசுமந்த" உற்சவமும் நடைபெற்றன வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் பண்டிதர் த சுப்பிரமணியம் அவர்கள் "பெருங்கருணைத் தடங்கடல்" என்னும் பொருள்பற்றி பக்திச் சுவை கலந்த சொற்பொழிவு நிகழ்த்தி சபையோரை மகிழ்வித்தார்.

நல்லூரில் சமயப்பிரசாரம்

—ம—

நல்லூர் தேவஸ்தான சண்முகதீர்த்த மண்டபத்தில் அ. இ. பொ. ச. சங்க ஆதரவின் இன்று நிகழும் சமயப்பிரசாரத் தொடரில் சைவப்பிரசாரகர் திரு. சி. தம்பிஐயா "அன்புடைமை" என்னும் பொருள்பற்றிச் சொற்பொழிவாற்றுவார்.

இடர்கெடுத்தருளும் குமர நாயகன்

——————0——————

கலியுகம் தர்ம விருத்தி குறைந்தது, ஏன்? தர்ம தேவதை ஒரு காலில் நிற்பதனாலென்க. அதர்மம் வளராது காக்க ஒரு குமரன் திருவுருக் கொண்டனன். ஆணவம், கன்மம் மாயை ஆகிய மூன்றும் ஒரே சகோதர வடிவங்கள் கொண்டன. தேவர்கள் வருந்தினர். ஐந்து முகமும் அதோமுகமுங்கருணை வெள்ளம பொழி உருவங் கொண்டருளினர் கைலாச பதி உலகுய்யக் கொண்ட உருவமறித் தம்மைப் புகழ வேண்டும என்ற திருவுளம் அவ்விறைவருக்கு இல்லை

"அருவமு முருவுமாகி
அநாதியாய்ப் பலவா
யொன்றாய்ப்
பிரமமாய் நின்றசோதிப்
பிழம்பதோர்
மேனியாகக்
கருணைகூர் முகங்களாறுங்
கரங்கள் பன்னிரண்டுங்
கொண்டே
ஒருதிருமுருகன்வந்தாங்குதித்தன
னுலகமுய்ய"

அடியாரிடர் அகல ஆறுமாமுகப்பெருமான் அருளுப பண்புடையவர்; பதித்துவ இலக்கணமுடையவர் இந்திராதி தேவர்கள் மேருமலையில் குழந்தை வடிவேற்பெருமான் திருவிளையாட்டயர மயங்கி

பிரமஸ்ரீ.
வ. மு. இரத்தினேஸ்வரையர்

னர்; போர் தொடுத்து மாண்டனர் நாரதரால் அன்னோரை அருளமுது சொரிந்து குமர நாயன் எழுப்பினர்.

கந்தநம ஐந்துமுகர் தந்தமுரு
கேச நம
கங்கை யுமைதன்
மைந்தநம பன்னிரு புயத்தநம
நீப மலர்
மாலை புனையும்
தந்தைநம ஆறுமுக வாதிநம
சோதி நம
தற்பர மதாம்
எந்தைநம என்றுமிளை யோய்நம
குமார நம
என்று தொழுதார்.

சைவ சமய சீலர்கள் இப்படித்தான் போற்றுக. அமரர்க்கருளிய ன் கைலைநண்ணா இறைவரும் இமைய குமாரியும மகிழ முதுக்குறைவலா முருகன் வீற்றிருந்தார்.

தீயார் மாயும் எல்லை வரப் பரமபதியானவர் பதினொரு உருத்திரர்களையும் பதினொரு படையாக்கி அருளினர். பின் சத்தியும் சிவமும் ஒன்றாய் வாய்ந்த பெருஞ் சத்தி வேலையுப என்றும் ஆற்றலுடன் நின்று அடியவரைப் புரக்க அருளப்பட்டது.

பின்பு சூரனும் தானே வீரன் என்று யுத்தஞ்செய்து களைத்தான். பரமகுரு தமது நிஜரூபங் காட்டப் புகழுந்தான்.

கோலமா மஞ்ஞை தன்னிற்
குலவிய குமரன் றன்னைப்
பாலனென் றிருந்தே னந்நாட்
பரிசிவை யுணர்ந்திலேன் யான்
மாலயன் றனக்கு மேனை வானவர்
தமக்கும் யார்கும்
மூலகாரணமாய் நின்ற மூர்த்தி
[illegible]
அண்ணலார் குமாரன்மேனி
அடிமுதல் முடியின் காறு

கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக் கோட்டில்
கீரிமலை யோசுவா யோன்
சின்னத்துரை —வழக்காளி
இல M B 3208
எதிராக
1. மாவிட்டிபுரம் யாழ்ப்பாணம் கந்தையா உமாபதிசிவம்
2. ஷெ ஊர் பெண் பரமேஸ்வரி
—எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 3208-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1963 ம் ஞு புரட்டாதி மீ 21ம் திகதி சனிக்கிழமை முற்பகல் பத்துமணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- முதல் வட்டி ரூபா 4015-ம் ரூபா 3000 க்கு 12-1-1960 தொடக்கம் 3-5-60 வரை 14 வீதமான வட்டியும் அதன்மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீதமான வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 218-65 சதம் தீர்வைத் தொகையில் ரூபா 2250/- கொடுபட்டது.

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி தெல்லிப்பளைக் கோவிற்பற்று தெல்லிப்பழை மேற்கிறை "குண்டுமண் கலட்டி" பர. நீ இல. பன்னிரண்டு குளி ஏழரை (பர. நீ. இல. 12 குளி 7½) கிணறும் கட்டிடங்களும் பயிர்வகைகளும், தண்ணீர்ப் பம்பும் எல்லை கிழக்கு முத்துக்குமாரு சுப்பிரமணியத்திற்கும் வயித்திலிங்கம் செல்லையாவிற்கும் மறுபேர்கட்குமுரிய வாதனங்கள். வடக்கு ஒழுங்கை. மேற்கும் தெற்கும் முருகேசர் பொன்னம்பலத்திற்கும் பெண் சின்னத்தங்கத்திற்குமுரியவாதனம். உறுதி பதிவு H 291/161.

வை. ஏரம்பமூர்த்தி
கொம்மிஷனர்,
1963-ம்ஞு ஆவணி மீ 7-ம் உ
காரைநகர்,
M 119 30-8-63.

பகிரங்கக் கடிதம் எழுதும் பழக்கம்



பெரியார்: திரு. சுந்தரலிங்கம் — திரு, செல்வநாயகத்துக்குப் பகிரங்கக்கடிதம் அடிக்கடி எழுதுகிறாரே, என்ன யோசனையோ?

விகடன்: தபாலிற் கடிதம்போட்டால் உரிய இடத்துக்குப் போய்ச் சேரமாட்டாதென்று பத்திரிகை மூலம் கடிதம் எழுகின்றார் போலும். கடிதம் எழுதும்காலம் இளமையிலேதான். ஆனுல் இளமையிற்பழக்கம் இறுதி வரைக்கும் என்பது பழமொழி அல்லவா?

மெண்ணிலா வூழிகால
மெத்திற நோக்கினுலுங்
கண்ணினு லடங்கா துன்னிற்
கருத்தினு லடங்காதென்பா
னண்ணினு னமநக் கென்கை
யருளென நாட்டலாமே.

பொன் விழாவும் பொருட்காட்சியும்

—0—

வைத்தீஸ்வர வித்தியாலயத்தின் பொன்விழாக் கொண்டாட்டம் எதிர்வரும் 3-9-63 செவ்வாய்க்கிழமை தொடக்கம் 8-9-63ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெற இருக்கிறது.

காலை கைப்பணி, விஞ்ஞான, வீட்டுப்பணி, தையற் பணி சம்பந்தமான பொருட்காட்சி ஒன்றும், 4-9-63 புதன்கிழமை மாலை 4 மணியளவில் உதவி வித்தியாதிபதி சி. உ. சோமசேகரம் அவர்களால் திறந்துவைக்கப்படும்.

இந்தியாவில் ஈழத் தமிழ் நூல்கள்

அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர் திரு. தெ.பொ. மீனுட்சிசுந்தரம்பிள்ளை அண்மையில் மேற்படி பல்கலைக் கழகத்தில் நிகழவிருக்கும் தமிழ்ப் புத்தகக் கண்காட்சியில் இலங்கைப் புத்தகங்களின் நூற் கண்காட்சிக்கு வைப்பதற்கென இலங்கையில் வெளியிடப்பட்ட நூல்களில் ஒவ்வொரு பிரதியை 5-9-63 இற்கிடையில் அனுப்பி உதவும்வண்ணம் இலங்கை வெளியீட்டு நிலையங்களைக் கோரியுள்ளார்.

நூல் அனுப்பவேண்டிய இடம்: தலைவர் அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலை நகர், தென்னிந்தியா

கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M.B. 5162.

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக் கோட்டில்

அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை.
கணபதிப்பிள்ளை செல்லையா
—வழக்காளி.
எதிராக
சந்தர்மடம், யாழ்ப்பாணம்
1. குழந்தைவேலு தாமோதரம்பிள்ளையும்
2. பெண் கற்பகமணி
—எதிராளிகள்.
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி
3. சுப்பிரமணியம் கனகசபை சேர்க்கப்பட்ட
—எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் M,B. 5162-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒருதுண்டுக் காணியை 1963-ம் ஆண்டு புரட்டாதிமாதம் 28-ம் திகதி (28-9-63) சனிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபா 4380/- இன்னும் ரூபா 3000/-த்திற்கு 17-10-62 தொடக்கம் 21-2-63 வரையும் 100-க்கு 12 வீத வட்டியும், பின்பு கூட்டுத் தொகைக்கு இறுபடும்வரைக்கும் 100-க்கு 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 236 சதம் 40. இதில் ரூபா 1500/- கொடுபட்டது.

ஆதன விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக், யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணைகோயிற்பற்று, வண்ணார்பண்ணை வடகிழக்கிறை "செட்டி தாழ்வு" பரப்பு நில. இலா. மூன்றும், கல்வீடும், கிணறும், பயிர்களும். சொல்லப்பட்ட ஆதனத்தின் எல்லை கிழக்கு ஒழுங்கை, வடக்கும், மேற்கும் தர்மலிங்கம் பெண் கனகம்மாவின் ஆதனம், தெற்கு சின்னையா, நடராசா, சண்முகநாதனின் ஆதனம்.

தா. செல்லையா,
கொமிசனரும்,விலைமதிப்பாளரும்
இல: 37.
கொழும்புத்துறை வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்,
M 123 23-8-63,

இவ்வாரம் 1-9-63 — 7-9-63

உங்கள் பலன்?

[ஸ்ரீ இராதாகிருஷ்ணன் கணிப்பது]

மேடராசி அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

உடல், குடும்ப நிலைமைகள் அவ்வளவு திருப்தியாயிருக்காது வேலை வழமையில் அதிகமாகும். செலவுகள் பெருகும். நண்பர் இடரிலிருந்து காப்பர்,

இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்,

ஞாயிறின் பின் உடல்நிலை திருந்தும், எதிரிகளுக்கு இன்னலும் உமது புது முயற்சியில் வெற்றியும் [illegible] நிலபுலங்களால் இ[illegible] உண்டாம் தந்தைவழி [illegible]றவினர் தொல்லை தருவர்,

மிதுனராசி மிருகசிரிடம், 2 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1ம், [illegible]ம் பாதம்.

ஞாயிறு திங்கள் எச்சரிக்கையோடு கழியவேண்டும். மன நிம்மதி இருக்காது. குடும்ப நிலைமை குழம்பலாக இருக்கும். பணநிலை திருந்த வேண்டும்.

கடகராசி புநர்பூசம் 4ம் பாதம், பூசம் ஆயிலியம்,

முதல் இருநாட்கள் புது முயற்சிகளுக்கு ஏற்றவை. செவ்வாய் புதன் வியாழன் காலை எச்சரிக்கையோடு கழியவேண்டும். மிகுதி நாட்கள் சாதகமாகும். இனத்தவருடன் மோதலுக்கு இடமுண்டு

சிங்கராசி மகம், பூரம். உத்த[illegible]ம் 1-ம் பாதம்.

தவறான விளக்கம் தெளிவுபடுத்தப்படும். எதிரிக்கு இன்னல் நிச்சயம், மன நிம்மதி இருக்காது. உடல்நிலைகோளாறும் உண்டாம். வியாழன் வெள்ளி எச்சரிக்கையோடு கழிய வேண்டும்.

கன்னிராசி உத்தரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

ஞாயிறுக்குப்பின் உடல்நிலை திருந்தவேண்டும். சொந்தப் பிரச்சினை சில தீர்வுறும், பண இலாபமும் புகழும் நிச்சயம்.

துலாம், சித்திரை 3 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

மன நிம்மதி இருக்காது. இனத்தவருடன் சண்டை, இரகசிய எதிரிகளின் தொல்லை உண்டாம். நண்பர் காப்பர்.

விருட்சிகராசி விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

பணபளவில் நல்ல வாரம், நிலபுலங்களால் இலாபம் உண்டாம். சிறு உடல் நிலைக் கோளாறுகள் உண்டாம். கண்ணோய் ஏற்படும்,

தனுராசி மூலம், பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

பணநிலை திருந்த வேண்டும், இடரிலிருந்து நண்பர் காப்பர். நிலபுலங்களால் இலாபம் உண்டாம். குடும்பநிலை குழம்பலாயிருக்கும்.

மகராசி உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்

திரும்பவும் தொல்லையான வாரம். நண்பரை அதிகம் நம்பியிருக்க வேண்டாம். உம்மை வீழ்த்தவிட எதிரிகள் முயல்வர். என்றாலும் வெற்றி பெறுர். குடும்ப நிலை திருந்தவேண்டும்

கும்பராசி அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,

தந்தையாரின் உடல்நிலை ஊறுபடும். பணமளவில் நல்ல வாரம். சொந்தப்பிரச்சினை சில தீர்வுறும் செலவுகள் பெருகும் ஆனல் போதிய வருவாய் பெறுவீர்.

மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.

உடல்நிலை பிரச்சினைக்குரியது. பணமளவில் நல்ல வாரம். விவசாய ஈடுபாடுகளில் வெற்றி நிச்சயம். எதிரிகளுக்கு இன்னல் உண்டாம்,

---

கோட்டு விற்பனவு விளம்பரம்

1. யேம்ஸ் நோவேற் யோசெப்புவும் மனைவி
2. பீலியோசெப்

கதிட்றல்தெரு யாழ்ப்பாணம், -வழக்காளிகள்

M B 4328

1. அந்தோனி வ. சவரியும்
2. பெண் எலிஸவெத்தும்

எதிரிகள் - பலாலி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டு M B 4328 ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் காணி 1963ம் ஆண்டு புரட்டாதி மாதம் 21-ம் உ சனிக்கிழமை காலை 10½ மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- ரூபா 1458-31ம் 13-10-61 தொடக்கம் 1-3-62 வரையில் ரூபா 1000-ற்கு 10 வீத வட்டியும் அதன் பின் பணம் மூற்றாக இறுபடும்வரையில் முழுத் தீர்வைத தொகைக்கு 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 194-95ம்.

ஆதன டாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் மயிலிட்டிக கோயில் பற்று பலாலி இறை 'ஐயக் கொக்கன்'' பர நில லாச்சம் மூன்றும் இணறும் வீடுகளும் பனைகளும். இந்தப் பரப்பு நில லாச்சம் மூன்றிற்கு எல்லை கிழக்கு ஞானப்பிரகாசம பெண் மரியம் மாவினதும் மறுபெயர்களுடைய ஆதனம். வடககு வல்லி காததானின் ஆதனம். மேற்கு இறெக்கறி தொம்மையின் ஆதனம். தெற்கு ஒழுங்கை -இதடங்களும்,

க. செல்வத்துரை,
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
''முருகன் இல்லம்''
இணுவில், 26-8-63.
M 120 30-8-63,

கோட்டு விற்பனவு விளம்பரம்

நல்லூர்
(1) கார்த்திகேசு இரத்தின சபாபதி —வழக்காளி
எதிராக
திருநெல்வேலி கிழக்கு
நியூகனக மெடிக்கல் இஸ்ரோஸ்
பருத்தித்துறை
(1) பொன்னையா கார்த்திகேசு
(2) பெண் நல்லம்மா
எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிககோட்டின் M 8 4809 ம் இலக்க வழக்கில் எனக்குக கிடைதத கோட்டுககட்டளைப்படி பின்னால் விபரிககப்படும ஒரு துண்டுக காணி 1963 ஞூ ஐப்பசிமீ 12 உ சனிககிழமை முற்பகல 9½ மணி தொடககம் அந்தக காணிககுள் நின்று பிரசிதத ஏலததில விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- முதல் ரூபா 4837-30 இதில் ரூபா 3000 க்கு 15-5-1962 திகதி துவக்கம் 25-1-63 வரைககும் 6 வீத வட்டியும் பின் திகதி தொடக்கம் இறுபடும்வரைககும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 225-45 இதில் ரூபா 125/- கொடுபட்டது.

காணி விபரம்

நல்லூர் கோவிற்பற்று திருநெல்வேலி இறை தில்லைநாதன் வளவும் சுந்தரன் வளவும் நிலப்பரப்பு 6 குளி 7½ கல்வீடும் கிணறும் வான் பயிர்களும் எல்லை கிழக்கு ஒழுங்கை முகப்பும் அருணாசலம் பெண் அன்னமுத்துவுககும் பங்காளருக்குமுரிய ஆதனங்கள், வடககு சரவணமுதது நடராசாவுக்கும் தம்பிமாருக்குமுரிய ஆதனங்கள், மேற்கு கந்தர் ஆறுமுகத்துக்குரிய ஆதனம். தெற்கு கையொழுங்கையும் ஒழுங்கையும். இதடக்கலும் விற்கப்படும்.

ந. ஆறுமுகம்
கொமிசனரும் விலைமதிப்பாளரும்

சித்தங்கேணி,
26-8-1963.
M 123, 30-8-63,

எழுத்தாளர் கடமை

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

செல்வநாயகம் B. S. C முதலியோரும் பங்குபற்றினர்.

அடுத்து அமைந்த சோமசுந்தரப்புலவர் அரங்கில் பட்டாங்கிலுள்ளபடி என்ற தலைப்பில் கவியரங்கம் நடைபெற்றது.

ஏல விற்பனை

—0—

கு. இல. AS/3.

யாழ்ப்பாணம் கந்தர்மடம் பழம் ரோட் 36-ம் இலக்க வீட்டில் திருமதி. செல்லம்மா மகாலிங்கம் அவர்களிடம் 29-5-19 7 முதல் 2-7-1962வரை அடைவு பிடித்து மீட்கப்படாத ரூபா. 20,000/- பெறுமதியுள்ள நகைகள் யாவையும் 196 -ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31-ம் திகதி சனிக்கிழமை மாலை 3 மணி தொடக்கம் குறித்த கடையில் இருந்து பிரசித்த ஏலததில் என்னால் விற்கப்படும்.

பொருட்களின் விபரங்கள் கந்தோர் நேரங்களில் பார்வையிடலாம்.

சி. செ முத்துக்குமாரு,
ஏலதாரர்.
ஏலதாரர் காரியாலயம்
6, மெயின் வீதி,
யாழ்ப்பாணம்.
M 116 23, 30-8-63

கோட்டு விற்பனவு விளம்பரம்

சாவகச்சேரி
டிஸ்திறிக்கோட்டில்
வரணி வடக்குக்குறிச்சி
சிதம்பரப்பிள்ளை நடராசபிள்ளை —மனுதாரர்.
142 நானுவித
எதிராக
1. தாவளை இயற்றாலை சின்னப்பு கதிர்காமரும்
2. பெண் சின்னப்பிள்ளையும் —பிரதிவாதிகள்.

சாவகச்சேரி டிஸ்திறிக்கோட்டு 142 நானுவித வழக்கில் எனக்குக கிடைத்த கட்டளைப்படி கீழ்க்காணுமாதனவிடாப்பில் நன்கு விபரிககப்படு மாதனங்கள் 1963-ம் ஆ புரட்டாதிமீ 28-ந உ சனிக்கிழமை பிற்பகல் 2 மணி தொடககம் அவ்வக்காணிகட்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-ரூபா 3000/- இதற்கு 12-11-62 தொடககம் இறுக்கும் வரைக்கும் 100-க்கு 5வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 256/10.

ஆதனவிடாப்பு:

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தென்மராட்சிப் பகுதி வரணிககோவிற்பற்று தாவளை இயற்றாலை இறை''பெரிய எருவன்வயல்'' 13பிரிவுகள் நெற்பரப்பு 13¾. எல்லை கிழக்கு சிவபாதசுந்தரம் பெண் சரஸ்வதிப்பிள்ளைக்குரியவாதனம். வடககு சின்னன் கனகனுக்குரியவாதனம். மேற்கு சிதம்பரப்பிள்ளை கார்த்திகேசுவுக்குரியவாதனம். தெற்கு மீசாலை ஊரெல்லை நடைவரபபு பதிவு F 143/19.

2. தென்மராட்சிப்பகுதி சாவகச்சேரிக்கோவிற்பற்று மீசாலையிறை ''தட்டான்சாட்டி'' நில பர. 13½, எல்லை கிழக்கு இராமலிங்கம் கைம்பெண் சிதம்பரத்துக்குரிய வாதனம். வடககு தாவளை இயற்றாலை ஊரெல்லை ஒழுங்கை. மேற்கு சுப்பா கதிரேசுவுககுரிய வாதனம். தெற்கு வல்லிபுரம் சிவக்கொழுந்துவுககுரியவாதனம். பதிவு இல. F 262/263.

3. ஷெ வரணிக்கோவிற்பற்று தாவளை இயற்றாலையிறை எருவன் தோட்டமும் மறு பிரிவுகளும் நில. பர. 52. இதில் வடககுப் பக்கமாக நில. பர. 30, இதில் வடகிழக்கு மூலையாக குளி 6 நீக்கி மிகுதி நில பர, 29 குளி 12 எல்லை கிழக்கு வரணிக்கிராமச் சங்கத்திற்கும் சிதம்பரப்பிள்ளை ஆறுமுகத்துக்கு முரிய வாதனம். வடக்கு கந்தையா வல்லிபுரத்துக் குரியவாதனமும் மறுபேருககு முரிய வாதனமும். மேற்கு 1-ம் பிரதிவாதிக்கும் பங்காளருக்கு முரியவாதனம். தெற்கு ஆறுமுகம் சின்னையாவுக்கும் பங்காளருககு முரியவாதனம். பதிவு F 272/154

மு. தா. மா[illegible]
[illegible]
சாவகச்சேரி, 3-9-63,
M 124 30-8-63

யாழ்ப்பாணம்

—ஐக்கிய இலாப நிதி—

1918-ம் ஆ ஸ்தாபிதமானது

100 ரூபா விகிதமான 5000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

சேமிப்புப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒருவிகித வட்டியுடன் சேமிப்புப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம் 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள நாஷனல்'' வங்கியிலும ''இம்பீரியல்' வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்.

Std. 1

சமய பாடத் தேர்தல்

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

3. மத்திய பிரிவு 16 வயதுக்குட்பட்டவர்கள்

1. காதலாகி. பண்: கௌசிகம, ராகம்: பைரவி, தாளம்: ஆதி.
2. பரவும் பரிசொன்றறு. பண்: காந்தாரப்பஞ்சமம், ராகம்: கேதாரகௌளை, தாளம்: ஆதி.
3. சோதியே சுடரே, (திருவாசகம்). ராகம்: மோகனம்.
4. பத்தியாய்ப்புணர்வோர், (திருவிசைப்பா). ராகம்: சக்கரவாகம்
5. செல்வலாண்ட, (திருப்பல்லாண்டு) ராகம்: ஆனந்தபைரவி.
6. சடைமருங்கில், (திருப்புராணம்). ராகம்: மத்தியமாவதி.
7. இயலிசையில, (திருப்புகழ்). ராகம்: உசேனி, தாளம்: ஆதி.

4, மேற்பிரிவு, 16 வயதுக்கு மேற்பட்டவர்கள்

1. குன்றவார்சிலை. பண்: இந்தளம், ராகம்: நாதநாமக்கிரியை தாளம்: திரிபுடை.
2. வம்பார் குன்றம். பண்: குறிஞ்சி, ராகம்: குறிஞ்சி, தாளம்: திரிபுடை.
3. சினைதனை நடுவிடை. பண்: நட்டபாடை, ராகம்: நாட்டை, தாளம்: ஆதி.
4. நினைபெறுமாறெண்ணுதி, (திருத்தாண்டகம்), ராகம்: அரிகாம்போதி.
5, சிந்தனை நின்றனக்காக்கி, (திருவாசகம்). ராகம்: மோகனம்.
6, அற்புதத்தெய்வம், (திருவிசைப்பா). ராகம்: ஆனந்தபைரவி.
7. மனனுகதில்லை, (திருப்பல்லாண்டு). ராகம்: கானடா,
8. சென்ற காலத்தின, (திருப்புராணம்). ராகம்: தோடி.
9. ஒருபொழுதிருசரணம், (திருப்புகழ்) ராகம்: சக்ரவாகம், தாளம்: மிஸ்ரசாபு திரிபுடை.

2. உபந்நியாசம்

1. ஆரம்ப பிரிவு: 10 வயதுக்குட்பட்டவர்கள்.

நேரம்: 5 நிமிஷம்

1. திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள்
2. மெய்கண்டதேவர்
3- விபூதி
4. ஆலய வழிபாடு
5. தந்தைதாய் பேண், இவற்றுளொன்று.

2. கீழ்ப்பிரிவு: 13 வயதுக்குட்பட்டவர்கள் நேரம்; 6 நிமிஷம்

1, திருநாவுக்கரசு சுவாமிகள்
2. அருணந்தி சிவாசாரியார்
3. உருத்திராக்கம்
4· கடவுள் வழிபாடு
5. மாகேஸ்வர பூசை இவற்றுளொன்று,

3, மத்திய பிரிவு: 16 வயதுக்குட்பட்டவர்கள்

நேரம்: 8 நிமிஷம்

1, சுந்தரமூர்த்தி சுவாமிகள்
2. உமாபதி சிவாசாரியார்
3. சிறீ. பஞ்சாக்கரம்
4 நித்திய கருமம்
5. சிவனடியார் பெருமை இவற்றுளொன்று,

4. மேற்பிரிவு: 16 வயதுக்கு மேற்பட்டவர்கள்

நேரம்: 10 நிமிஷம்

1. மாணிக்கவாசக சுவாமிகள்
2. சிவஞான சுவாமிகள்
3. சிவதீட்சை
4, உற்சவங்கள்
5. சைவாசாரம் இவற்றுளொன்று.

3. புராணபடனம்

மாணவர்கள் எவரும் பங்குபற்றலாம். ஒவ்வொருவரும் பயன் சொல்லவும், இசையுடன் படிக்கவும் தெரிந்திருத்தல் வேண்டும். கந்தபுராணம் – காசிபனுபதேசப்படலம்

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில் யாழ்ப்பாணம் பிறவுண்வீதி, 2ம் ஒழுங்கை, 2ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. ஐயம்பிள்ளை சின்னத்துரை அவர்களால் 30-8-1963 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

ஆசிரியர்: நம. சிவப்பிரகாசம்.